[8th September 1959

THE HON. SRI R. VENKATARAMAN : பீடி தொழிலாளர்கள் இந்த பாக்டரி ஆக்டின் கீழ் வரவில்லை.

SRI P. S. CHINNADURAI : கோவையை அடுத்த முதுக்கரை—குனியமுத்தூர் பகுதியில் சுமார் 3000 தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். இதை அரசாங்கம் தயவுசெய்து பரிசீலனை செய்து இந்தட் பகுதிக்கும் இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர உத்தேசிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : என்னிடத்தில் ராஜ்யம் பூராவும் எந்தெந்த ஊரில் எவ்வளவு தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணிக்கை இருக்கிறது. கனம் அங்கத்தினர் சென்ஸஸ் எடுத்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன் என் கணக்குப் பிரகாரம் இங்குள்ள தொழிலாளர்கள் 3000 பேருக்கு இல்லை.

MR. SPEAKER : நான் சொன்னபடியே கேள்விகளை சீக்கிரமாய் முடிப்பதற்கு என்னுடன் ஒத்துழைத்த கனம் அங்கத்தினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்,

[*Note.*—AN ASTERISK (*) AT THE COMMENCEMENT OF A SPEECH INDICATES REVISION BY THE MEMBER.]

II. ADJOURNMENT MOTIONS.

(1) DILAPIDATED CONDITION OF THE HOUSES IN SARMA NAGAR AND THIRU VI. KA NAGAR.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from Sri V. K. Kothandaraman to discuss the grievous situation caused to the residents of Sarma Nagar and Thiru Vi. Ka. Nagar, Madras by the dilapidated condition of the houses and the failure of the Government to arrange for proper repairs. I would like to know from the Hon. Minister concerned if this a concern of the Government and if the condition of the dilapidation mentioned here is of recent occurrence. Then, I shall give my ruling.

THE HON. SRI R. VENKATARAMAN : ஸார். சர்மாநகர், திரு வி. க. நகரில் கட்டிடங்கள் சப்சிடைஸ்ட் ஸ்கீம்களிலும் சென்னை நகரத்தில் கட்டப்பட்டதை ஒன்றும் டிலாபிலேடட் கண்டிஷன் என்று சொல்வதற்கான நிலையில் இல்லை. சற்று பழுதாக இருக்கலாம். இது வெகுநாளாக இருந்துகொண்டு வந்திருக்கிறது. அதை சரி செய்யவேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

(Sri V. K. Kothandaraman rose.)

MR. SPEAKER : நான் அனுமதித்தால் கனம் அங்கத்தினர் பேச முடியும். கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து இதில் அரசாங்கம் சம்பந்தம் இருந்தாலும் இது அவசரமானது அல்ல. நீண்ட நாளாக இருந்துவருவதாகத் தெரிகிறது. ஆகவே இதற்கு அனுமதி கிடையாது.

SRI V. K. KOTHANDARAMAN : 1957-ல் இந்தக் கட்டிடங்கள் கட்டி முடிந்தது. இப்பொழுது கிட்டத்தட்ட மூன்று வருஷங்கள் ஆகிவிட்டது. கட்டிடங்கள் அநேக இடங்களில். . . . . .

MR. SPEAKER : நான் அனுமதித்தால்தான் கனம் அங்கத்தினர் பேச முடியும். அவர் தயவு செய்து உட்காரவேண்டும்.

(2) UNEMPLOYMENT OF WORKERS IN SRI KARUNAMBIKAI MILLS, SOMANUR (COIMBATORE DISTRICT).

MR. SPEAKER : I have received notice of an adjurnment motion from Sri P. S. Chinnadurai. It is stated therein that the Government have failed to provide adequate electricity to Sri

8th September 1959] [Mr. Speaker]

Karunambikai Mills, Somanur (Coimbatore District) as a result of which about 107 workers have been unemployed. I would like to know from the Hon. Minister how far this matter is a responsibility of the Government.

THE HON. SRI V. RAMAIAH : On the face of it, it is definitely a dispute between the Mill and the Electricity Board as such. The general power position in our State is very-good and it is not due to general shortage that a shift has been shut down. I do not see any reason how this can arise now.

(Sri P. S. Chinnadurai rose.)

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் என்ன சொல்லமுடியும்? ஸ்ரீ கோதண்டராமன் அவர்களுக்கு சொன்னதுபோல் நான் அனுமதி கொடுத்தால்தான் கனம் அங்கத்தினர் பேசலாம், என்னுடைய ரூமில் வந்து கேட்டால் ஒருக்கால் அவர்களுக்கு அனுகூலமாக இருக்கலாம்.

The supply of electricity is a concern of the Electricity Board and the Government do not seem to have any direct responsibility. The Government no doubt lays down the policy and the day to day administration is looked after by the Electricity Board. This is certainly a matter for the Board and not for the Government. I rule the motion out of order.

SRI P. S. CHINNADURAI : நான் ஒரு விஷயம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எலக்ரிசிடி சம்பந்தமான விஷயங்கள் இந்த சபையிலே அனுமதிக்கப்பட்டதா? எலக்ரிசிடி போர்டு சம்பந்தப்பட்ட விவகாரங்கள் குறித்து கனம் அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு உரிய பொறுப்பு இருக்கிறதா, இல்லையா என்பதை மாத்திரம் அறிந்துக்கொள்ள விரும்புகிறேன்,

MR. SPEAKER : The day to day working is a matter entirely for the Board to decide. This House can discuss about policy and other matters. This is a day to day matter. Supply of electricity to X, Y or Z is a matter on which this House cannot give a decision. I am afraid I cannot permit the motion.

III—CALLING ATTENTION TO THE FAILURE OF GOVERNMENT TO START FAMINE RELIEF WORKS IN NORTH ARCOT DISTRICT.

SRI S. M. ANNAMALAI : Mr. Speaker, Sir, under rule 41 I now call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, viz., failure of the Government to start famine relief works in North Arcot district.

கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து மழை இல்லாத காரணத்தால் மக்களுக்கு வேலை இல்லாமல், வேலைவாய்ப்பு இல்லாமல், நமது மாவட்டத்தை விட்டு மைசூர் மாநிலத்திலுள்ள ஸ்ரீ முக, பத்திராவதி முதலிய இடங்களில் பிழைக்க வழிதேடி கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு கூட இந்த மன்றத்திலே வட ஆர்க்காடு மாவட்டத்தில் மழை இல்லை என்று நான் ஒரு அவசரத் தீர்மானம் கொண்டுவந்ததின் பேரில் ரெமிஷன் செய்யப்பட்டதே ஒழிய அங்குள்ள மக்களுக்கு பஞ்சநிவாரண வேலை யாவும் சர்க்கார் தொடங்கவில்லை. மேலும் இந்த ஆண்டும் தொடர்ந்து மழை இல்லாத காரணத்தினால்